නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
FMM SRI LANKA Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2021 தொகுதி 03 மார்ச்

## ஊடக சுதந்திரம் மற்றும் நிராகரிக்க முடியாத சிவில் உரிமைகள்

குறித்த அறிக்கையானது 2021 சனவரியில் சுதந்திர ஊடக இயக்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு மாதாந்த அறிக்கையின் மூன்றாவது வெளியீடாகும். சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊடக சுதந்திரம் தொடர்பில் பத்து குறிகாட்டிகளை உள்ளடக்கி எழு பகுதிகூருகளின் கீழ் குறித்த அறிக்கையானது அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தலைப்பின் கீழ் காணப்படும் சில நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் நேரடியாக ஊடக சுதந்திரத்திற்கு தொடர்பு காணப்படாத போதிலும் , கருத்து தெரிவித்தல் சுதந்திரம் , நகர்வு சுதந்திரம் மற்றும் தகவல் பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் தொடர்பான உரிமைகள் மீறப்பட்டுள்ளமையால் குறித்த நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இவ்வகையான சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் மறைமுகமான உளவியல் துஸ்பிரயோகம் என்பதை ஏற்றுக்கோள்ள வேண்டியுள்ளது. ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் பத்து வகையான உரிமைகள் குறிகாட்டிகள் ஆனது ஊடகவியலாளர்களுக்கு மாத்திரமானது அல்ல என்பதுடன் குறித்த உரிமைகளானது மனித உரிமை ஆர்வலர்கள்,தவறான கருத்துக்களை கொண்ட அறிவியலாளர்கள் உட்பட குடிமக்களுக்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இங்கு நிராகரிக்க முடியாத உரிமைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதல் வெளியீட்டு அறிக்கையில் குறிப்பிட்டது போல் , ஊடக சுதந்திரம் குறித்த 2020 ஆம் ஆண்டு அறிக்கை சர்வதேச பத்திரிகை சுதந்திர தினத்தில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அறிக்கையை மேம்படுத்துவதற்கு உங்கள் கருத்துக்கள் மிக முக்கியமானவை என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டிகொள்கின்றேன்

**சீதா ரஞ்சனி**
தலைவர்

ஊடக சுதந்திரம் குறித்து மார்ச் மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள்,சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் ,நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் சம்பந்தமாகவும் சுருக்கமான முறையில் அறிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை தொடர்பான சம்பவங்களும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஊடக சுதந்திரம் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்போது சுதந்திர ஊடக இயக்கத்தால் தேர்தேடுக்கப்பட்ட பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 13 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மார்ச் 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திர ஊடக இயக்கம் மூன்று சம்பவங்கள் குறித்து ஊடக அறிக்கை வெளியிட்டதுடன் ஒரு சம்பவம் தொடர்பாக ஐந்து சகோதர ஊடக அமைப்புகளுடன் இணைந்து ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு என்ற வகையில் ஒரு கூட்டு அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

## மார்ச் மாதத்தில் இடம்பெற்ற புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்

1. பிபிசி தமிழ் வலைத்தள நிருபர் ரஞ்சன் அருண் பிரசாத்தின் பின்னால் முன் தெரிந்திராத நபர்கள் பின்தொடர்தல்.
2. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டத்தை முறையாக விளக்கும் ஒரு சட்டத்தை வகுக்க இலங்கை பத்திரிகை நிறுவனம் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தமை.
3. இலங்கை பத்திரிகை பேரவை சட்ட மறுசீரமைப்பு நடவடிக்கையை கடுமையாக எதிர்த்து வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சகத்தின் செயலாளருக்கு கடிதம் அனுப்பிய சுதந்திர ஊடக இயக்கம், இந்தச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.
4. சுயாதீன ஊடகவியலாளர் மற்றும் மனித உரிமை ஆர்வலர் ஆன ருகி பெர்னாண்டோ மற்றும் இன்னும் இரு பத்திரிகையாளர்களை வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் இரணைதீவுகுள் நுழைய கடற்படையினரால் அனுமதி வழங்கப்படாமை.
5. லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக வாஷிங்டன் போஸ்டில் பிரசுரமான அஹிம்சா விக்கிரமதுங்க எழுதிய கட்டுரை குறித்து வெளியுறவு செயலாளர் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் இச்செயற்பாடானது “இலங்கையை அழிக்கும் முயற்சி“ என்று விமர்சித்தமை.
6. “சியரட” வலைத்தளத்தின் ஊடகவியலாளரான சுஜீவ கமகே தான் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறி காவல்துறையில் முறையீடு அளித்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை.

7. 2021 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு மூலம், 2021 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க ,பயங்கரவாதத் தடுப்பு (வன்முறையான மட்டுமீறிய மதக்கொள்கையை கொண்டிருப்பதற்கெதிரான தீவிரமயமற்றதாக்குதல்) உத்தரவு பிறப்பித்தல்.

8. சிங்கராஜ அருகே நடைபெற்று வரும் சுற்றுச்சூழல் பேரழிவு குறித்து தொலைக்காட்சி நிகழ்ச்சியின் போது தனது கருத்துக்களை தெரிவித்த பாக்யா அபேரத்னவை காவல்துறையினரால் விசாரணை மேற்கொள்ளல் நடவடிக்கை.

9. முகப்புத்தக நிறுவனம்,மனித உரிமைகள் கொள்கை நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு உதவி நிதியம் ஒன்றை ஆரம்பித்தமை.

10. 2021 மார்ச் 19 ஆம் திகதி சர்வதேச காலநிலை மாற்ற தினத்தை நினைவுகூரும் பொருட்டு கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் அமைக்கப்பட்ட ஓவியத்தை,பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவு மற்றும் கொழும்பு நகராட்சி ஆணையரின் தலையீட்டால் அகற்றப்பட்டமை.

11. உதயன் செய்திப்பத்திரிகையின் நிர்வாக இயக்குனர் சரவணபவன் மற்றும் குறித்த நிறுவனத்தில் தொழில் புரியும் கே.திலிப் அமுதன் இருவரும் , யாழ்பாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

12. மார்ச் 20 ம் தேதி நுவரெலியாவில் “கிராமத்துடன் கலந்துரையாடல்” நிகழ்ச்சியில் பங்கேற்றபோது ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ ஊடகங்களை அச்சுறுத்திய நடவடிக்கை

13. யாழ்ப்பாணத்தின் நாவர் தெருவில் உள்ள tubetamil யூடியூப் சேனலின் அலுவலகம் மற்றும் www.tubetamil.com என்ற வலைத்தளத்தின் அலுவலகத்தை சுற்றிவளைத்து சோதனை செய்யப்பட்டு, அந்த ஊடகங்களுடன் தொடர்புடைய இரண்டு நபர்களை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை சம்பவம்.

**அட்டவணை இல: 01**

**அறிக்கையிடப்பட்டமொத்த நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் – மார்ச் 2021**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 07 |
| 02 | சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 05 |
| 03 | ஊடகங்கள் தொடர்பான புதிய ,முக்கிய போக்குகள் | 01 |
| | **மொத்தம்** | **13** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஓர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. இந்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தும் ஏழு நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மார்ச் மாதத்தில் கண்காணிக்கபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.மேலும் ஊடக தொழில் வல்லுனர்கள் நேரடியாக எதிர்கொள்ளும் நிகழ்வுகள்,சம்பவங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் கருத்து தெரிவித்ததன் காரணமாக பொதுமக்கள் எதிர்கொள்ள நேரிட்ட சம்பவங்கள், நிகழ்வுகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு நிகழ்வானது ஓவியத்தின் மூலம் கருத்துச் சுதந்திரம் சவாலுக்கு உள்ளான சம்பவம் ஒன்றும் பதிவாகியமை கவனிக்கத்தக்கதாகும். மேலும் இவற்றில் மிகவும் அவதானிக்கத்தகு சம்பவமாக கருதப்படுவது, ஊடகங்களுக்கு எதிராக ஜனாதிபதி அச்சுறுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து தொடர்பிலாகும்.

**அட்டவணை 2: 2021 மார்ச் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 07**

| இலக்கம் | நிகழ்வு மற்றும் சம்பவம் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அச்சுறுத்தல் விடுத்தல் | 01 |
| 02 | தகவல் பெற்றுகொள்ளும் மற்றும் தகவல் அணுகலுக்கான உரிமையை தடுத்தல். | 01 |
| 03 | கருத்து சுதந்திரத்தை இழத்தல் | 01 |
| 04 | கடத்தல் மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகம் | 01 |
| 05 | உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 03 |
| | **மொத்தம்** | **07** |

## மார்ச் மாதத்திற்கான புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

1. **பிபிசி தமிழ் நிருபரான ரஞ்சன் அருண் பிரசாத்தின் பின்னால் அடையாளம் தெரியாத நபர்களின் பின்தொடர்தல்.**

கொழும்பில் சந்தேக நபர்கள் குழுவொன்று தமது தகவல்களை தேடி பின்தொடர்வதாகவும், வடக்கிற்கான தொழில் நிமித்த பயணத்தின்போது சில அடையாளம் தெரியாத நபர்கள் அவரை பின்தொடர்ந்ததாகவும் பிபிசி தமிழ் தமிழ் இணையதள நிருபரான ரஞ்சன் அருண் பிரசாத் மார்ச் 03 ஆம் திகதி காவல்துறை தலைமையகத்தில் புகார் அளித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தில் நிலவும் கலந்துரையாடல் குறித்து பிபிசி தமிழ் வலைத்தளம் வட மக்களின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கையொன்றை வெளியீடு செய்ததன் பின்னரே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அறிக்கை வெளியான பின்னர், மார்ச் 1 ம் தேதி இறக்குவானையில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்ற ஒரு குழுவும், மார்ச் 2 ஆம் தேதி கண்டியில் உள்ள அவரது மனைவியின் வீட்டிற்குச் சென்ற இரண்டு பேரும் அவரைப் பற்றி விசாரித்ததாக அருண் பிரசாத் தெரிவித்துள்ளார். குறித்த ஊடகவியளாளரின் புகார் தொடர்பாக காவல்துறை இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தககதாகும்.

2. **சுயாதீன ஊடகவியலாளர் மற்றும் மனித உரிமை ஆர்வலரான ருகி பெர்னாண்டோ மற்றும் இன்னும் இரு பத்திரிகையாளர்களை வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இரணைதீவுகுள் நுழைய கடற்படையினரால் அனுமதி வழங்கப்படாமை.**

மார்ச் 05 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைதீவுக்கு விஜயம் செய்ய முற்பட்ட மனித உரிமை ஆர்வலர்,சுயாதீன ஊடகவியலாளர் ஆன ருகி பெர்னாண்டோ மற்றும் மேலும் இரு சுயாதீன ஊடகவியலாளர்களும் குறித்த தீவுக்கு நுழைய கடற்படையினரினால் தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தகதாகும். இருந்தபோதிலும் குறித்த சம்பவம் தொடர்பாக நியாயமான காரணத்தை வழங்க அதிகாரிகள் தவறிவிட்டமை கவனிக்கத்தகதாகும்.இது குறித்து கிளிநொச்சி அரசாங்க அதிபர், அரசாங்க தகவல் பணிப்பாளர் மற்றும் செகுசன ஊடக அமைச்சரிடம் வினவியபோது குறித்த அதிகாரிகள் குறிப்பிட்டதாவது இத்தடை தொடர்பில் தங்களுக்கு எவ்வித தகவலும் தெரியாது என்பதாகும். இருப்பினும், கடற்படை ஊடக செய்தித் தொடர்பாளர் இந்திக டி சில்வா MediaLK இணையதளத்திற்கு தெரிவித்துள்ளதாவது, இரணைத்தீவு குடியிருப்பாளர்களைத் தவிர வேறு யாரும் தீவுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளதாக செய்தி வலைத்தளத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணையத்திடம் புகார் அளித்த ருகி பெர்னாண்டோ, கடற்படை அதிகாரிகளின் குறித்த நடவடிக்கையானது அரசியலமைப்பு உரிமைகளான, குறிப்பாக நகர்வு அல்லது பயணம் செய்வதற்கான சுதந்திரம் (பிரிவு 14-1-H) மற்றும் பேச்சு சுதந்திரம்,வெளிப்படுத்தும் சுதந்திரம் (பிரிவு 14-1-A) போன்ற பிரிவுகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் தெரியப்படுத்தினார்.

கிளிநொச்சி பிரதேச பிரிவு செயலாளரினால் கடற்படைக்கு இரணைத்தீவு குடியிருப்பாளர்களின் பட்டியலை வழங்கியிருப்பினும், யாரும் அங்கு பயணிப்பதை தடை விதிக்கப்படவில்லை என்பதுடன் மேலும் அரசியலமைப்பு 15 வது பிரிவின் படி கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் மற்றும் நகர்வு சுதந்திரம் அல்லது பயணம் செய்வதற்கான சுதந்திரத்தை "சட்டத்தின் வரையறுக்கப்பட்ட படி" மாத்திரமே கட்டுப்படுத்த முடியும் என்பதுடன்,குறித்த சம்பவமானது சட்டவிரோதம் மற்றும் நியாயமற்ற ஒரு செயல்பாடாகும் என்பதை அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட "இரணைதீவு" கிராமத்தில் மீனவர் சமூகம் வாழ்ந்து வருவதுடன், கொவிட் தொற்றுக்கு உள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை இரணைதீவில் அடக்கம் செய்ய அரசாங்கம் எடுத்த முடிவுக்கு எதிராக குடியிருப்பாளர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

3. **லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக வாஷிங்டன் போஸ்டில் பிரசுரமான அஹிம்சா விக்கிரமதுங்க எழுதிய கட்டுரை குறித்து வெளியுறவு செயலாளர் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் இச்செயற்பாடானது "இலங்கையை அழிக்கும் முயற்சி" என்று விமர்சித்தமை.**

12 ஆண்டுகளுக்கு முன்பு சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை குறித்து, இன்றுவரை, இலங்கை அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுக்க தவறியமை தொடர்பில் அஹிம்சா விக்கிரமதுங்க (படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியரின் மகள்) எழுதிய கட்டுரை 'My father was assassinated 12 years ago. Sri Lanka's leaders are still denying us justice' என்ற தலைப்பில் மார்ச் 2 ஆம் திகதி வாஷிங்டன் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே மற்றும் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கெஹெலியா ரம்புக்வெல்ல ஆகியோர் dailymirror.lk செய்தி வலைத்தளத்திற்கு கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் அஹிம்சாவின் கட்டுரையானது "இலங்கைத் தலைவர்கள் மீது பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை விதிக்க சர்வதேச சமூகத்தை அணிதிரட்டுவதன் மூலம் இலங்கையை அழித்து அதன் இலங்கையை வீழ்ச்சியடைய செய்யும் முயற்சி" என்று வெளியுறவு செயலாளர் குறிப்பிட்டுள்ளமை காணக்கூடியதாகவுள்ளது.

(that it was an attempt to "destroy Sri Lanka and see its downfall" by rallying the international community to impose travel restrictions and embargoes on Sri Lankan leaders.)

அரச ஊடக செய்தித் தொடர்பாளராக இருக்கும் ஊடக அமைச்சர் குறிப்பிடும் விடயமாவது, "எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் குழுக்களின் வலைப்பின்னலால் அஹிம்ஸா கட்டுப்படுத்தப்படுவதாகத் தெரிகிறது". ("the public feels that she is tied to a string and is being controlled by certain parties" including opposition politicians and Diaspora groups.) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை (UNHRC) முன் நாடு எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளும் தருணத்தில் அஹிம்ஸாவின் குறிப்பிட்ட செயற்பாடானது கவலையளிக்கும் விடயமாக காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

தனது தந்தைக்கு ஏற்பட்ட நிலைமைக்கு எதிராக நீதியை பெற்றுகொள்ளும் நோக்கில் குரல் எழுப்பிய காரணத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அஹிம்ஸா விக்கிரமதுங்கவை நாட்டின்

எதிரியாகவும், பல்வேறு தரப்பினரின் உந்துதல் காரணமாக செயல்படும் நபராகவும் முத்திரை குத்தப்பட்டுள்ளமை மேலே குறிப்பிட்ட கூற்றுக்களில் இருந்து தெரிந்துகொள்ள முடியுமாக உள்ளது. குறித்த அநாகரிக செயற்பாடானது சுதந்திர கருத்து வெளிப்படுத்துவதை அதைரிய படுத்தும் நடவடிக்கை மற்றும் பேச்சு சுதந்திரம் ,கருத்து தெரிவிக்கும் நபர்களுக்கு எதிராக சமூகத்திற்குள் வன்மத்தை உண்டாக்கி சமூகத்தை தவறான முறையின் வழிநடத்தும் செயல்பாடாக கருதகூடியதாக உள்ளது.

4. **“சியரட” வலைத்தளத்தின் ஊடகவியலாளரான சுஜீவ கமகே தான் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறி காவல்துறையில் முறையீடு அளித்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை.**

“சியரட” வலைத்தளத்தின் ஊடகவியலாளரான சுஜீவ கமகே பல்வேறு அச்சு மற்றும் இலத்திரனியல் செய்தி வலைத்தளங்களில் சில காலம் தொட்டே பணிபுரிந்துவந்த சுயாதீன ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மார்ச் 10 ஆம் திகதி மீரிகம பகுதியில் வைத்து ஒரு குழுவினரால் அவர் கடத்தப்பட்டு கருப்புநிற வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அழைத்துச்சென்று சித்திரவதை செய்யப்பட்டு அவரிடம் காணப்பட்டதாக கூறப்படும் சில ரகசிய தகவல்கள் அடங்கிய தரவு அட்டை தொடர்பில் வினவியதாகவும் , பின்னர் தெமடகொட பகுதிக்கு கொண்டு வரப்பட்டு கைவிடப்பட்டார் என்றும் அவர் கூறினார் என்பது குறிப்பிடத்தகதாகும். மார்ச் 17 ம் திகதி சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்ட அறிக்கையில், குறித்த சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொணர்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதை குறித்த ஊடக அறிக்கை வேண்டிநின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

தீக்காயங்கள் மற்றும் பிற காயங்களுடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் 17 ஆம் திகதி வரை கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு செல்லும் வழியில் கொழும்பு குற்றவியல் காவல்துறை பிரிவு (CCD) அவரை கைது செய்தது. பின்னர் அவர் ஒரு தவறான புகார் அளித்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மாஜிஸ்திரேட் முன் ஆஜர்படுத்தப்பட்டு பிணை வழங்கப்பட்டது.

மார்ச் 19 ஆம் திகதி செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த காவல்துறை ஊடகப்பேச்சாளர், பிரதி காவற்துறை மா அதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டதாவது குறித்த சம்பவம் பொய்யாக வர்ணிக்கப்பட்ட புனைக்கதை என்பதுடன்.அவர் 9 ஆம் திகதி வீட்டில் இருந்த ஒரு மேசன் கரண்டியால் தன்னை சூடேற்றியதாகவும், அந்த நோக்கத்திற்காக தான் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மேசன் கரண்டியையும் காட்டியதாகவும் ஊடக சந்திப்பில் பிரதி காவல்துறை மா அதிபர் குறிப்பிட்டார்.அதேநேரத்தில் கொழும்பு காவல்துறை குற்றவியல் பிரிவு தன்னை தனது தரப்புதாரரான சுஜீவ கமகே வின் உரிமைகளை பிரதிநிதிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று சுஜீவவின் வழக்கறிஞரான நாமல் ராஜபக்ச ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

மார்ச் 21 ஆம் திகதி ஒரு செய்தியாளர் சந்திப்பை ஏற்படுத்தி உரையாற்றிய சுஜீவ கமகே,காவல்துறையால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். மார்ச் 25 ம் திகதி குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, குறித்த நபரை கைதுசெய்ய கொழும்பு குற்றவியல் பிரிவு கோரிய மனுவை நீதிமன்றம் நிராகரித்தது. இந்த வழக்கு மீண்டும் ஜூலை 29 ஆம் தேதி விசாரிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

5. **சிங்கராஜ அருகே நடைபெற்று வரும் சுற்றுச்சூழல் பேரழிவு குறித்து தொலைக்காட்சி நிகழ்ச்சியின் போது தனது கருத்துக்களை தெரிவித்த பாக்யா அபேரத்னவை காவல்துறையினரால் விசாரணை மேற்கொள்ளல் நடவடிக்கை.**

மார்ச் 13 ம் திகதி சிரச டிவியில் ஒளிபரப்பான “சிரச லக்சபதி“ வினா விடை நிகழ்ச்சியில் பங்கேற்ற இறக்குவானை பிரதேசத்தை சேர்ந்த பாக்யா அபேரத்ன, சிங்கராஜா வனப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவது குறித்து கருத்து தெரிவித்தார். குறித்த யுவதி குறிப்பிட்ட கருத்துக்களில் அவரது வீட்டிற்கு அருகாமையில் உள்ள நிலத்தில் ஹோட்டல் ஒன்று கட்டப்படுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றிய கருத்தும் உள்ளடங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.குறித்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்ட மறுநாள் (மார்ச் 14), இரு இறக்குவானை காவல்துறை அதிகாரிகள் பாக்யாவின் வீட்டிற்குச் சென்று அவரிடமிருந்து ஒரு அறிக்கையை பதிவு செய்ததுடன். அதன்பிறகு, வனத்துறை அதிகாரியும் அங்கு சென்று குறித்த யுவதியை சிரமப்படுத்தும் முறையில் விசாரித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இத்துடன் பாக்யா பொய் பிரச்சாரம் செய்வதாக கூறி சமூக ஊடகங்களின் மூலம் குறித்த யுவதிக்கு எதிராக வன்மம் மற்றும் அச்சுறுத்தும் வகையில் கருத்துக்கள் பரிமாற்றப்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

இது தொடர்பில்,மார்ச் 17 ஆம் திகதி சுதந்திர ஊடக இயக்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில், பாக்யாவின் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை ஆதரித்து குரல் கொடுத்ததுடன், கருத்துச் சுதந்திர செயற்பாடுகளை அதைரியப்படுத்தும் இதுபோன்ற செயல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சனநாயக சமுதாயத்தில் கருத்து தெரிவிக்கும் உரிமை மற்றும் மாற்றுக்கருத்துக்களை சமூக பொறுப்புடன் செயல்படுத்துதல் மற்றும் அதன் எல்லை,நோக்கங்களை விரிவுபடுத்துதல் போன்றவை குடிமக்களின் உரிமையாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கருத்து தெரிவிக்கும் உரிமை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல் மற்றும் அதனை பாதுகாத்து போசிப்பதும் அரசியலமைப்பு ரீதியாக மற்றும் ஒழுக்கவியல் ரீதியாக அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள அதிகாரிகளினதும் தார்மீக கடப்பாடாகும் என்பதை சுதந்திர ஊடக இயக்கத்தினால் வெளியிட்ட ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

6. **2021 மார்ச் 19 ஆம் திகதி சர்வதேச காலநிலை மாற்ற தினத்தை நினைவுகூரும் பொருட்டு கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் அமைக்கப்பட்ட ஓவியத்தை,பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவு மற்றும் கொழும்பு நகராட்சி ஆணையரின் தலையீட்டால் குறித்த ஓவியத்தை அகற்றியமை.**

Wildlife and Nature Protection Society (WNPS) அமைப்பினால், உலகளாவிய காலநிலை மாற்ற தினத்தை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக Stop Ecocide என்ற கருப்பொருளின் கீழ் முன்வைக்கப்பட்ட 70X20 அடி ஓவியத்தில் சுற்றுசூழல் அழிப்பு மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் குறித்த ஓவியமானது வரையப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. WNPS அமைப்பின் இளவயது ஆர்வலர்களான, WNPS இளைஞர் பிரிவைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அடங்கிய குழு, குறித்த ஓவியத்தை உருவாக்க சுயமாக முன்வந்து செயற்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

ஆரம்பத்தில், காவல்துறையினருடன் வந்த குழுவினர் குறித்த ஓவியத்தை அகற்றிக்கொண்டிருந்த போது, அமைப்பை

பிரதிநிதிப்படுத்துபவர்கள் சிலர் குறித்த ஓவியம் ஆனது உரிய அனுமதியுடன் நிறுவப்பட்டதை சுட்டிக்காட்டிய பின்னர் காவல்துறை அதிகாரிகளுடன் வருகை தந்த குறித்த நபர்கள் மீண்டும் நிறுவியமை குறிப்பிடத்தகதாகும். ஆனால் பின்னர் காவல்துறை சுற்றுச்சூழல் பிரிவு இயக்குனரான ரோஹான் ராஜபக்ச மற்றும் கொழும்பு நகராட்சி ஆணையர் ரோஹினி திசாநாயக்க ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து, குறித்த ஓவியமானது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாக கூறி, சில நபர்களை நிறுத்தி குறித்த ஓவியத்தை அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.காவல்துறை மேற்கொண்ட குறித்த நடவடிக்கை சட்டத்திற்கு எதிரானது என வழக்கறிஞர் ஜகத் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளமையும் கவனிக்கத்தககதாகும்.

மேலும், அந்த இடத்தில் காவல்துறை சுற்றுச்சூழல் பிரிவு இயக்குனர் ரோஹன் ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுடன் ,கடும் கண்டனத்திற்கும் உள்ளாகியது. குறித்த அதிகாரி கூறிய சர்ச்சைக்குரிய விடயமாவது 'நமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே சுற்றுச்சூழல் குறித்து இதுபோன்ற கருத்துக்கள் உருவாகியுள்ளது' என்பதே ஆகும்

உரிய முறையில் அனுமதி பெற்று காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இந்த ஓவியம் ஜனாதிபதி செயலகத்தின் உத்தரவின்படி அகற்றப்பட்டதாக Daily mirror வலைத்தளம் தெரிவித்துள்ளது. https://bit.ly/2Qtghl2 அடுத்த நாள் (மார்ச் 20) திகதி நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலகத்தின் யோம்புவெல்தென்ன கிராமத்தில் நடைபெற்ற "கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்வில் போது குறித்த ஓவிய விவகாரம் தொடர்பில் விமர்சன ரீதியாக கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். https://youtu.be/vJ7uMxLwx2c

7. **மார்ச் 20 ம் தேதி நுவரெலியாவில் "கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்ச்சியில் பங்கேற்றபோது ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ ஊடகங்களை அச்சுறுத்திய நடவடிக்கை.**

சனாதிபதி கோதாபய ராஜபக்ஸ கடந்த மார்ச் 20 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலகத்தின் யோம்புவெல்தென்ன கிராமத்தில் நடைபெற்ற "கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்வில் பங்கேற்று பொது ஊடகம் தொடர்பில் வெளியிட்ட கருத்தானது சமூகத்தில் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். https://www.youtube.com/watch?v=vJ7uMxLwx2c

சனாதிபதி குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு,"இது ஒரு மாஃபியா,எங்கள் நாட்டில் மன்னர்கள் இல்லை,மகாராஜாக்கள் இல்லை,இந்தியாவில் மாகாராஜாக்கள் இருந்தனர். உரிமையாளர் விரும்பிய படி நாட்டை இயக்க முடியாது. ஆட்சியாளர்களை ஆட்சி செய்ய முயற்சிக்கின்றனர். அந்த விடயம் என்னிடம் நடக்காது. எனக்கு தெரியும் பாடம் பயில தேவைப்படுபவர்களுக்கு பாடம் புகட்ட.நான் ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளேன்.எந்தவொரு ஊடக நிறுவனத்தையும் அச்சுறுத்தியதில்லை.(ஊடக சுதந்திரத்தை) தவறாகப் பயன்படுத்த முற்பட்டால் அதற்கு எதிராக சட்ட ஏற்பாடுகள் உள்ளன.குறித்த ஊடகம் மட்டுமல்ல, சில தேசிய சிந்தனை கொண்ட ஊடகங்களும் போலி செய்திகளை ஒளிபரப்பியுள்ளது. போர் காலங்களில் எமக்கு எதிராக பணியாற்றியவர்களும் இதில் உள்ளதுடன் அவர்கள் மீள எழுந்துள்ளனர்" தனது உரையில் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும்.

இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் உட்பட ஆறு ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயமாவது, ஜனாதிபதியின் குறித்த அறிக்கையானது கருத்து சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கையாகவும், குறிப்பாக அரசாங்கத்திற்கு எதிராக விமர்சனக் கருத்துக்களை தெரிவிக்கும் ஊடகங்களை அச்சுறுத்தும் சமிஞ்சையாகவும் ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு இச்செயலை நோக்குகின்றது.

குறிப்பாக "அந்த விடயம் என்னிடம் நடக்காது. பாடம் பயில வேண்டுமாயின் பாடம் புகட்ட எனக்கு தெரியும். போர் காலங்களில் எமக்கு எதிராக பணியாற்றியவர்களும் இதில் உள்ளதுடன் அவர்கள் மீள எழுந்துள்ளனர்" போன்ற சொல் பிரயோகங்கள் கடந்த காலங்களில் பொது ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ள நேரிட்ட இன்னும் தீர்க்கபாடாத குற்றங்களின் நினைவூட்டலாகும் என்பது தொடர்பிலும் குறித்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த ஊடக அறிக்கையில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம்,சுதந்திர ஊடக இயக்கம் , இளம் பத்திரிகையாளர்கள் சங்கம், தமிழ் ஊடக மன்றம், ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆகிய அமைப்புகள் கையெழுத்திட்டன. https://bit.ly/3mrGzA9

சனாதிபதியின் குறித்த சர்ச்சைக்குரிய கூற்றுக்கு பதிலளிக்கும் வகையில் SAFMA அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயமாவது "ஊடக அமைப்புகளை இலக்குவைப்பதானது ஊடக சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பொதுமக்களின் தகவல் தெரிந்து கொள்ளும் உரிமைக்கும் கட்டுப்பாடு இடும் நடவடிக்கையாகும்" (Targeting of media businesses harms media freedom,curbs public info) https://bit.ly/31dogVk

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பில் சட்டவிதிமுறை தலைப்பு அல்லது பகுதி கூறுக்குள் உள்ளடக்கப்படும் ஐந்து நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மார்ச் மாத அறிக்கையில் கண்காணிக்கபட்டு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அந்த நிகழ்வுகள் சட்டரீதியான நடவடிக்கை,ஊடக சுதந்திரத்திற்கு கட்டுபாடுகள் விதித்தல், ஊடக உள்ளடகத்தை தணிக்கை,துண்டித்தல் செய்தல் மற்றும் தகவல் அறியும் உரிமை போன்ற துணை தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.**

**அட்டவணை 3: மார்ச் 2021: சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 04**

| இலக்கம் | நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள்/சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 02 |
| 02 | புதிய சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் உருவாக்கல் | 01 |
| 03 | சட்ட மறுசீரமைப்பு பரிந்துரை | 02 |
| | **மொத்தம்** | **05** |

## மார்ச் மாதத்திற்கான புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்

1. **நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டத்தை முறையாக விளக்கும் ஒரு சட்டத்தை வகுக்க இலங்கை பத்திரிகை நிறுவனம் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தமை.**

வேறு நாடுகளில் காணப்படுவதை போல இலங்கையில் , நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தை உரிய முறையில் வரையறுக்கும் எந்தவொரு சட்டமும் இல்லாததால் ,அது குறித்து சட்டம் ஒன்றை வகுக்குமாறு வேண்டி நீதி அமைச்சரான ஜனாதிபதி வழக்கறிஞர் அலி சப்ரி அவர்களுக்கு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட கடிதத்தில், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக உரிய விளக்கத்துடன் அமைந்த சட்டங்களை உருவாக்குவது நீண்டகால தேவைப்பபடாகும் என்பது தொடர்பிலும் குறிபிடப்பட்டிருந்தமை வரவேற்கத்தக்கதாகும்.

சனாதிபதி வழக்கறிஞரான லக்ஸ்மன் கதிர்காமரின் தலைமையில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்வுக் குழுவுக்கு வழங்கிய இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் முன் வைக்கப்பட்ட திட்டங்களின் அடிப்படையிலேயே குறித்த முன்மொழிவானது வடிவமைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.இலங்கையின் மனித உரிமைகள் ஆணையத்தின் ஆலோசனைக் குழுவால் 2006 இல் தயாரிக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு மசோதாவையும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நீதி அமைச்சருக்கு வழங்கியதுடன் குறித்த அறிக்கையில் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை நீதிபதிகளின் சங்கத்தின் கருத்துக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தகதாகும்.

இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர்கள் சங்கம், இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் , சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகியவை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பங்குதாரர் அமைப்புகளாகும். ,தமிழ் ஊடக மன்றம், ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு -இலங்கை கிளை ஆகியவை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் துணை நிறுவனங்களாகும்.

2. **இலங்கை பத்திரிகை பேரவை சட்ட மறுசீரமைப்பு நடவடிக்கையை கடுமையாக எதிர்த்து வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சகத்தின் செயலாளருக்கு கடிதம் அனுப்பிய சுதந்திர ஊடக இயக்கம், இந்தச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.**

ஏறக்குறைய 50 ஆண்டுகள் பழமையான, மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு தீங்கு விளைவிக்க கூடிய, சட்டத்தினால் பாதுகாப்பு கவசமும் பெற்ற காலத்தினால் காலாவதியுமான இலங்கை பத்திரிகை பேரவை சட்ட, மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பை தெரிவித்தும்அச்சட்டத்தைரத்துசெய்யகோரிக்கைவிடுத்தும்,சுதந்திர ஊடக இயக்கமானது வெகுசன ஊடக அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1973 ஆண்டு 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தின் மூலமாக அமைக்கப்பெற்ற இலங்கை பத்திரிகை பேரவை சபையை கட்டமைப்பு ரீதியாக மறுசீரமைப்பிற்கு உட்படுத்தி இலத்திரனியல்,அச்சு மற்றும் புதிய ஊடகங்களை ஒருங்கிணைத்து, ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பாக தீர்ப்பாய நிறுவனமாக (தீர்ப்பு வழங்கும் நிறுவனமாக) மறுசீரமைப்பதற்கு எதிர்பார்பதாக வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு பதிலளிக்கும் வகையில் குறித்த கடிதமானது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கமானது தனது நிலைபாடான ஊடக சுதந்திரத்திற்கு தீங்கு விளைவிக்கும் சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியதும், அரச நிறுவனம் ஒன்றிற்கு ஊடக ஒழுங்கமைப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு காணப்படும் அதிகாரம் தொடர்பில் தமது இயக்கமானது நீண்டகாலம் தொட்டே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறித்து மார்ச் 12 ஆம் திகதி செகுசன ஊடக அமைச்சிற்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன். மேலும் ஊடக சமூகத்தின் ஒத்துழைப்பு மற்றும் அங்கீகாரத்துடன் செயற்படும் ஊடக பன்முகத்தன்மை,ஊடக சுயாதீனம்,சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்பு பாதுகாக்கப்படுகின்றதும் அனைத்து ஊடகங்களும் உள்ளீர்க்கபட்ட “சுய ஒழுங்குமுறை அல்லது சுய கட்டுபாட்டு” செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சுதந்திர ஊடக இயக்கம் இணக்கம் தெரிவித்து கொள்ளுவதுடன், மாறாக இலங்கை பத்திரிகை பேரவை சபைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற காரணங்கள் தொடர்பிலும் தமது கடிதத்தில் விளக்கமளித்துள்ளது.

3. **2021 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு மூலம், 2021 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க ,பயங்கரவாதத் தடுப்பு (வன்முறையான மட்டுமீறிய மதக்கொள்கையை கொண்டிருப்பதற்கெதிரான தீவிரமயமற்றதாக்குதல்) உத்தரவு பிறப்பித்தல்.**

அரசியலமைப்பின் 4 பிரிவின் (ஆ) பகுதியுடன் இணைந்து பார்க்கபட வேண்டிய1979ஆம்ஆண்டின்48ஆம்இலக்கபயங்கரவாதத்தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 27இன் கீழ் மேற்கண்ட உத்தரவுகளை ஜனாதிபதி பிறப்பித்துள்ளதுடன் , குறித்த சட்டத்தின் மூலம் கைது செய்யும் சந்தேகநபர்களை வழக்கு தொடராமலேயே புனர்வாழ்வு நடவடிக்கைக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதுடன் குறித்த காலமானது இரண்டு வருடங்களாக நீடிக்கவும்

செய்துள்ளமை அவதானிக்கத்தக்கதாகும்.இப்புதிய ஏற்பாடுகளை கொண்ட பயங்கரவாத தடுப்பு சட்டமானது கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட மனித உரிமைகளுக்கு எதிராக உபயோகிக்கப்படுவதன் சிக்கல்களை அதிகரிப்பதற்கான செயற்பாடாகவே ஊடக சமூகம் குறித்த சட்டத்தை நோக்குகின்றது.

இது குறித்து ஹியூமன் ரயிட்ஸ் வொட்ச் நிறுவனம் கூறுகையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள புதிய விதிமுறைகள் கருத்துச் சுதந்திரத்தை எல்லையற்ற முறையில் கட்டுப்படுத்துகின்றன என்பதாகும்.

வழக்கு விசாரணைகள் ஏதுமின்றி இரண்டு ஆண்டுகள் வரை நியாயமற்ற வகையில் தடுத்து வைக்க அனுமதிக்கும் இலங்கையின் புதிய விதிமுறைகளை அனைத்துலக நீதிமன்றம் கண்டித்துள்ளதுடன்,இந்த விதிமுறைகள் சிறுபான்மை மத மற்றும் இன சமூகங்களை பாரபட்சமான முறையில் குறிவைக்கக்கூடும் என்பதையும் குறித்த அமைப்பானது சுட்டிக்காட்டுகின்றது.

பாராளுமன்றத்தின் எவ்வித தலையீடும் இல்லாமல் நிறைவேற்று அதிகாரியால்(ஜனாதிபதியால்) விதிக்கப்பட்ட இந்த விதிமுறைகள், எவ்விதமான விசாரணையின்றி சிறைவாசம் அனுபவிக்க அனுமதிக்கப்படுவதுடன் , இது இலங்கை அரசியலமைப்பின் 13 வது பிரிவின் கீழ் இலங்கையின் அரசியலமைப்பு உத்தரவாதங்களை மீறுவதாகவும், அத்துடன் சர்வதேச சட்ட பிரகடனங்களை மீறும் செயற்பாடு என்று குறித்த அமைப்பானது கருதுகின்றது.

4. **யாழ்ப்பாணத்தின் நாவர் தெருவில் உள்ள tubetamil யூடியூப் சேனலின் அலுவலகம் மற்றும் www.tubetamil.com என்ற வலைத்தளத்தின் அலுவலகத்தை சுற்றி சோதனை செய்யப்பட்டு, அந்த ஊடகங்களுடன் தொடர்புடைய இரண்டு நபர்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை சம்பவம்.**

மார்ச் 29 ஆம் திகதி யாழ்பாணத்தில் நாவர் தெருவில் அமைந்துள்ள tubetamil யூடியுப் சேனல் மற்றும் www.tubetamil.com வலைதளத்தில் பணிபுரியும் 35 வாயதான பெண்ணும்,36 வயதான ஆணும் கைது செய்யப்பட்டதுடன், அத்துடன் அலுவலகத்தில் காணப்பட்ட 5 டெஸ்க்டாப் கணணிகளும், 05 மடிக்கணணிகளும் இன்னும் சில உபகரணங்களை காவல்துறை கைப்பற்றியதாக பிரதி காவற்துறை மா அதிபர் அஜித் ரோஹன ஊடக கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து மேலே குறிப்பிட்ட யூடியூப் சேனல் மற்றும் செய்தி வலைத்தளம் மூலம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் பல்வேறு செய்திகளை வெளியிட்டமையே குறித்த கைது நடவடிக்கைக்கு காரணமாக கூறப்படுவதுடன் மேலதிக விசாரணைகளுக்கு குறிப்பிட்ட நபர்கள் கொழும்பு பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு கூட்டிக்கொண்டு செல்வதாகவும் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் குறித்த நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை நடத்துவதற்கு எதிர்பார்பதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் ஊடகங்களுக்கு அளித்த அறிக்கை - https://bit.ly/3suSorn

வரழநவயஅடை சேனலின் கைது பற்றிய செய்திகள் - https://bit.ly/3m22iy8

## முந்தைய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான முன்னேற்றங்கள்:

1. **உதயன் செய்திப்பத்திரிகையின் நிர்வாக இயக்குனர் சரவணபவன் மற்றும் குறித்த நிறுவனத்தில் தொழில் புரியும் கே.திலிப் அமுதன் இருவரும் , யாழ்பாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் எடுத்துக்கொண்ட வழக்கில் விடுதலை செய்யப்பட்டனர்.**

டிசம்பர் 26, 2020 அன்று, எல்.ரீ.ரீ.இ இயக்கத்தின் முன்னாள் தலைவரான வேலுபிள்ளை பிரபாகரனின் புகைப்படம் ஒன்றை உதயன் பத்திரிகையில் பிரசுரித்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட உதயன் பத்திரிகை முகாமை இயக்குனரான சரவணபவன் மற்றும் குறித்த நிறுவனத்தில் பணிபுரிபவர்களான கே.திலீப் அமுதன் இருவருக்கும் எதிராக யாழ்பாண காவல்துறை பொறுப்பதிகாரியான பிரசாத் பிரனாண்டு, யாழ்பாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். மாவீரர் தினத்தை நினைவுகூருவதற்கு எதிராக வழங்கப்பட்டிருந்த தடை உத்தரவை மீறியதாக குறித்த நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

மார்ச் 19 ம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது,அவர்கள் இருவரும் சந்தேக நபர்களாக கருதப்படாததால் இருவரையும் விடுவிக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டமை குறிப்பிடத்தகதாகும்.இந்த வழக்கில் சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனை பெற தங்களுக்கு நேரம் தேவை என்று காவல்துறை வேண்டிய போதிலும், விசாரணையைத் தொடர காவல்துறையினருக்கு எந்தவிதமான தடையும் இல்லை என்று மாஜிஸ்திரேட் குறிப்பிட்டார், ஆனால் மேற்கண்ட சந்தேக நபர்கள் இதற்குமேல் சந்தேக நபர்களாக அழைக்கப்பட மாட்டார்கள் என நீதிபதி குறிப்பிட்டார். இருந்த போதிலும் குறித்த இருவரும் நீதிமன்றத்திற்கு அழைப்புவிடுக்கும் போது நீதிமன்றத்திற்கு வர வேண்டும் என நீதிபதி குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கதாகவும். அடுத்த வழக்கு விசாரணை ஜூலை 16 ஆம் திகதி நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஊடகங்கள் தொடர்பான புதிய, முக்கிய போக்குகள்

1. **முகப்புத்தக நிறுவனம், மனித உரிமைகள் கொள்கை நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு உதவி நிதியம் ஒன்றை ஆரம்பித்தமை.**

2020-03-16 அன்று, பேஸ்புக் நிறுவனம்,மனித உரிமைக்கொள்கை நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு உதவ ஒரு நிதியத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சமூக ஊடகத்துறையில் மிக முக்கியமான படியாகும் என சமூகத்தின் மத்தியில் பாராட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.இந்த நடவடிக்கையின் நோக்கத்தை விளக்கிய பேஸ்புக் நிறுவனம், தனது வணிக நடவடிக்கைகள், தயாரிப்பு மேம்பாடு, கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களில் மனித உரிமைகளை மதிக்க உறுதிபூண்டுள்ளது என்றும், அந்த உறுதிப்பாட்டை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் குறித்த நிறுவனம் ஆனது செய்தி வெளியிட்டுள்ளது. https://bit.ly/30SegAF

"பாதுகாப்பு,கௌரவம் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை, மனித உரிமைகளின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் வழிகாட்டுதல்களை மதிக்கும் அமைப்பு முறையொன்றை உருவாக்குவதை பேஸ்புக் நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது."

பேஸ்புக்கின் இந்த நடவடிக்கையை பாராட்டி அறிக்கையொன்றை வெளியிடும் Access Now அமைப்பு பேஸ்புக்கின் புதிய மனித உரிமைக் கொள்கையை வரவேற்பதுடன்,மனித உரிமைகளை மதிக்க விரும்பும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இது ஒரு முக்கியமான முன்னுதாரணமாகும் என்பதை குறிப்பிட்ட அறிக்கையில் சுட்டிகாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "ஆனாலும் பேஸ்புக் போன்ற ஒரு பெரிய மற்றும் சக்தி வாய்ந்த நிறுவனத்திடமிருந்து குறித்த அறிவிப்புக்காக 17 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். https://bit.ly/3eUrq8N

**அட்டவணை 4: ஊடக சுதந்திரம்: 2021 சனவரி முதல் மார்ச் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள் | 2021 ஜனவரி–பிப்ரவரி | மார்ச் 2021 |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 06 | 07 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 09 | 05 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 | |
| **மொத்தம்** | **16** | **12** |

சனவரி 2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை https://bit.ly/3wqcdCx

பெப்ரவரி 2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை https://bit.ly/39SZeiW

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனாங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25